தினமணி

**விவசாயிகளின் விவரங்களைச் சேகரிக்கும் பணி தொடக்கம்**

First Published : 21 Jul 2011 01:15:05 PM IST

புதுக்கோட்டை, ஜூலை 20: விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில், நிரந்தரப் பயணத் திட்டம் மூலம் விவசாயிகளின் அனைத்து விவரங்களையும் சேகரிக்கும் பணியில் வேளாண் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி, செவ்வாய்க்கிழமை புதுக்கோட்டை அருகேயுள்ள கல்லுக்காரன்பட்டி ஊராட்சியில் வேளான் துறையினர் விவசாயிகளை நேரில் சந்தித்து விவரங்களைச் சேகரித்தனர்.

இந்தத் திட்டம் குறித்து வேளாண் துணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் விவசாயிகளிடம் விளக்கிப் பேசியது:

விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை பரிந்துரை செய்து, அதிக பரப்பிலான பயிர் சாகுபடியில் அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயகளின் வாழ்க்கைத் தரத்தையும், அவர்களின் வருமானத்தையும் இரண்டு மடங்காக உயர்த்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

அதனடிப்படையில், வேளாண் களப் பணியாளர்கள் தினந்தோறும் ஊராட்சி அளவில் விவசாயிகளைச் சந்தித்து, தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும், விவசாயிகளின் வயல்களை நேரடியாகப் பார்வையிட்டு மகசூலை அதிகரிக்கத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதிலும் 13 ஊராட்சிகளிலும் உள்ள களப் பணியாளர்கள், நிரந்தர பயணத் திட்டம் மூலம் தினமும் விவசாயிகளைச் சந்தித்து ஆலோசனைகள் கூறி வருகின்றனர்.

இந்த மாத இறுதிக்குள் அறிக்கை தயாரிப்பு: மாநிலம் முழுவதும் உள்ள சிறு, குறு விவசாயிகளின் தற்போதைய வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்தத் திட்டமிட்டு, அதற்கு அடிப்படையாக சிறு, குறு விவசாயிகளின் அனைத்து விவரங்களையும் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி உத்தரவின் பேரில் வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு வழிகாட்டுதலில், வேளாண் அலுவலர்களின் தலைமையில் உதவி வேளாண் அலுவலர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிகளை வருகிற 30-ம் தேதிக்குள் முடித்து, அறிக்கை தயாரித்து அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

சேகரிக்கப்படும் விவரங்கள்: விவசாயியின் பெயர், இனம், செல்போன் எண், வங்கிக் கணக்கு எண், கல்வித் தகுதி, விவசாயிகளின் பெயரில் இருக்கும் நிலத்தின் பரப்பு, சர்வே எண், மண்ணில் உள்ள சத்துகளின் அளவு, நீர் பாய்ச்சப்படும் பரப்பு, கிணறுகளின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

மேலும், விவசாயிகளின் தேவையை அறிந்து கொள்ளும் வகையில், அவர்களின் தற்போது உள்ள விவசாய இயந்திரங்கள், உபகரணங்கள் குறித்த விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

உப தொழில்கள் விவரம்: விவசாயம் மட்டுமன்றி அதைச் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, தோட்டக்கலை பயிர் சாகுபடி, மர சாகுபடி, மீன் வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு ஆகிய தொழில்களிலும் கவனம் செலுத்தி, அந்தத் தொழில்களிலும் வருமானத்தைப் பெருக்கும் வகையில், இந்தத் தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமான விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

தவிர, ஒவ்வொரு பயிர் சாகுபடி காலத்திலும் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர் விவரங்கள், மகசூல், அதன்மூலம் கிடைக்கும் வருமானம், தற்போதைய சாகுபடியில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகள், விவசாயியின் வருமானத்தை உயர்த்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

மேலும், விவசாய நிலங்களை சீர்படுத்தும் நோக்கில், தேவையான சீர்திருத்தங்கள், நீர் பிடிப்புப் பகுதி நடவடிக்கைகள், சிக்கன நீர்த் தேவைக்கான நுண்ணீர் பாசன முறைகள், நீர் ஆதாரத்தில் இருந்து பயிர் சாகுபடி இடத்துக்கு வீணாகாமல் நீரை எடுத்துச் செல்வதற்கான பாசனக் குழாய்களின் தேவை ஆகிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

திட்டம் தயாரிப்பு: இந்த அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு, ஒவ்வொரு விவசாயிக்கும் அவருடைய வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள், இடுபொருள்கள் ஆகியவை பற்றியும், தேவையான காலம் குறித்தும் திட்டம் தயாரிக்கப்பட உள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்படும் திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளின் சாகுபடியை நேரில் காண்காணித்து, அவர்களின் வருமானத்தைப் பெருக்க திட்டமிட்டுள்ள அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் பணியில் வேளாண் அலுவலர்கள் தீவிர களப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அடையாள அட்டை: தயாரிக்கப்படும் திட்டங்கள் குறித்து ஒவ்வொரு விவாசாயிக்கும் அடையாள அட்டை தயாரித்து அளிக்கப்படவுள்ளது.

வருங்காலங்களில் அனைத்து விவசாயிகளுக்கும் இந்த அடையாள அட்டை மூலமாகவே அரசின் அனைத்து திட்ட மானியங்களும், சலுகைகளும் வழங்கப்படவுள்ளன.

எனவே, விவசாயிகள் தங்கள் பகுதிக்கு வரும் வேளாண் துறை அலுவலர்களிடம் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை, புகைப்படம் போன்ற தேவையான விவரங்களை அளித்து அரசின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும் என்றார் வேண்டும் ஷாஜகான்.
ஊராட்சித் தலைவர் தர்மராஜ், துணைத் தலைவர் சேது, ஒன்றியக் குழு உறுப்பினர் பிரபாவதி மற்றும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் இதில் பங்கேற்றனர்.

**நெல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 21 Jul 2011 01:27:38 PM IST

தஞ்சாவூர், ஜூலை 20: நெல் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

தஞ்சாவூர், காட்டுத்தோட்டத்திலுள்ள மண், நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் திருவையாறு, மகராஜபுரம், புனல்வாசல், திருபழனம், விளாங்குடி ஆகிய இடங்களில் அண்மையில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

உழவியல் துறை உதவிப் பேராசிரியர் ச. வள்ளல் கண்ணன் பசுந்தாள் உரம் மற்றும் குறுவை சாகுபடிக்கு ஏற்ற ரகங்கள் குறித்து பயிற்சி அளித்தார். விதை தொழில்நுட்பவியல் துறை உதவிப் பேராசிரியர் கா. பரமேஸ்வரி விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார்.

**"விவசாயிகள் அக்ரி கிளினிக்கை பயன்படுத்துவது அவசியம்'**

First Published : 21 Jul 2011 12:06:37 PM IST

விருதுநகர், ஜூலை 19: விருதுநகர் விவசாயிகள் குறைந்த செலவில் சேவை அளிக்கும் அக்ரி கிளினிக்கை பயன்படுத்துவது அவசியம் என கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிக்குமார் தெரிவித்தார்.

விருதுநகர் அருகே தொப்பலாக்கரை கிராமத்தில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், கிரிப்கோ கூட்டுறவு உர நிறுவனம் ஆகியவை இணைந்து விவசாயிகளுக்கு கருத்தரங்கம் நடத்தின.

கருத்தரங்கிற்கு அருப்புக்கோட்டை துணைப்பதிவாளர் போ.ரவீந்திரன் முன்னிலை வகித்தார். கூட்டுறவுக் கடன் சங்கத்தின் தனி அலுவலர் ராஜேந்திரபிரசாத் வரவேற்றார்.

இதில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிக்குமார் தலைமை வகித்துப் பேசியதாவது:

தமிழகத்தில் கூட்டுறவு கடன் சங்கங்கள் நிதி நிலை மிகவும் பின் தங்கி இருந்தது. ஆனால் இப்பகுதி விவசாயிகள் ஒத்துழைப்பால் இன்று உறுப்பினர்களுக்கு ஈவுத் தொகை வழங்கும் அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது அரசின் பல்வேறு திட்டங்களில் அதிக ஈடுபாடு கொண்டு பல்நோக்கு சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் விவசாயிகளுக்கு பட்டா, சிட்டா சான்றிதழ்கள் பெறவும், மின்கட்டணம் செலுத்தவும் குறைந்த கட்டணத்தில் செய்து தருகிறது.

விளை நிலங்களில் மண் வளத்தின் தன்மை, உரம் இடுவது போன்ற பல்வேறு பணிகளை குறைந்த செலவில் செய்வதற்காக ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திலும் அரசின் அக்ரி கிளினிக் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதை விவசாயிகள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இச்சங்கத்தின் விவசாயிகளுக்கு நகைக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. வரும் காலத்தில் இச்சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான விவசாய உபகரணங்கள், விவசாய பவர் டிரில்லர், உரமிடும் கருவி, பூச்சி தெளிப்பான் போன்ற கருவிகளை குறைந்த வாடகைக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், நெல், மக்காச்சோள விதைகள் ஆகியவை ஆண்டுதோறும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றார்.

இதில் டான்பெட் மேலாளர் ஆர்.சூரியகாந்தி, மதுரை வானொலி நிலைய பண்ணை இல்ல ஒலிபரப்பு அலுவலர் தனபாலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குறுவை நெல்லை காப்பீடு செய்ய அழைப்பு**

First Published : 21 Jul 2011 01:31:05 PM IST

திருவாரூர், ஜூலை 20: குறுவை நெல்லைக் காப்பீடு செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2011-ம் ஆண்டு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் காப்பீடு செய்யலாம். நிகழாண்டு குறுவை நெல் பருவத்துக்கு பயிர்க் காப்பீடு செய்ய கடன் பெறும் விவசாயிகளுக்கு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியும், கடன் பெறாத விவசாயிகளுக்கு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதியும் பிரிமியம் செலுத்த இறுதி நாளாகும். குறுவை நெல் பயிருக்கு ஏக்கருக்கு இயல்பான காப்பீட்டுத் தொகை ரூ. 13,556. கடன் பெற்ற சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 169-ம் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 153-ம் பிரிமிய தொகை செலுத்த வேண்டும்.

அனைத்து விவசாயிகளும் கூடுதல் காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ. 22,592-க்கு பிரிமிய தொகை செலுத்தத் தகுதியானவர்கள். கூடுதல் காப்பீட்டுத் தொகைக்கு கடன் பெற்ற சிறு, குறு

மற்றும் இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 316, கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ. 285 பிரிமியத் தொகை செலுத்த வேண்டும். எனவே, குறுவை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்று பயன் பெறலாம் என்றார் ஆட்சியர்.

**50 சத மானிய விலையில் பசுந்தாள் உர விதைகள்**

First Published : 21 Jul 2011 12:30:40 PM IST

கரூர், ஜூலை 20: 50 சத மானிய விலையில் பசுந்தாள் உர விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதுகுறித்து தாந்தோன்றிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க. கவிதா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பசுந்தாள் உரப் பயிர்கள் என்பது மண்ணின் பெப்தீக தன்மைகளை மேம்படுத்தி, அதிகளவில் தழைச்சத்தை வளிமண்டலத்திலிருந்து கிரகித்து, வேர் முடிச்சுகளில் நிலைப்படுத்தி, மடக்கி உழுதபின் பயிரிடப்படும் பயிருக்கு எளிதில் கிடைக்கும் வகையில் தரவல்லவை.

சம்பா பருவத்திற்கு முன் வயல்களில் பசுந்தாள் உரப் பயிர் விதைகளை இட்டு, அவை பூக்கும் முன்பு வயலில் மடக்கி உழ வேண்டும்.

அல்லது, வேறிடத்தில் இப்பயிர்களை வளர்த்து 45-வது நாளில் பிடுங்கி, பயிரிடப்படும் வயலில் இட்டு உழுவது சாலச் சிறந்ததாகும்.

மண் வளத்தைப் பாதுகாப்பதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பசுந்தாள் உரப்பயிர் தக்கைப் பூண்டு விதைகள் 50 சத மானிய விலையில் தாந்தோன்றிமலை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விற்பனைக்கு உள்ளன.

தக்கைப் பூண்டில் 3.5 சத தழைச் சத்து, 0.6 சத மணிச்சத்து, 1.2 சத சாம்பல் சத்து உள்ளது.

எனவே, விவசாயிகள் விரிவாக்க மையத்தை அணுகி, இந்த விதைகளை வாங்கிப் பயன் பெற வேண்டும்.

**விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்**

First Published : 21 Jul 2011 01:06:46 PM IST

பெரம்பலூர், ஜூலை 20: பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரத்தில் இயங்கி வரும் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், மாவட்ட வேளாண்மை துறை அட்மா

திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வேளாண் இணை இயக்குநர் செ. சிவகுமார் தலைமை வகித்தார். துணை இயக்குநர் (மத்திய திட்டங்கள்) வே.விஜயகுமார், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் கவிமணி, ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. மாரிமுத்து, பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் ஆகியோர் நெல், பருத்தி, வெங்காயம், மஞ்சள், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களின் விதைநேர்த்தி, விதைப்பு, பருவம், உர மேலாண்மை, நீர் மேலாண்மை, பூச்சிநோய் மேலாண்மை, அறுவடை மற்றும் விளைபொருள் விற்பனை போன்றவைகள் குறித்து பெரம்பலூர், வேப்பந்தட்டை, வேப்பூர் மற்றும் ஆலத்தூர் வட்டார விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

மேலும், எவ்வாறு பூஞ்சாணக் கொல்லி கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பது, சரியான காலத்தில் விதைப்பது, மண் பரிசோதனை செய்து உரமிடுவது, நுண்ணூட்டச்சத்து இடுவது, எந்த நிலையில் நீர் கட்டுவது, ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சியைக் கட்டுப்படுத்துவது, அறுவடை செய்து எங்கு விற்பது உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

இந்நிகழ்ச்சியில், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வேளாண் துறை அலுவலர் (மத்திய திட்டங்கள்) ரெ. மோகன் வரவேற்றார். ஆலத்தூர் வட்டார வேளாண்மை துணை இயக்குநர் இளங்கோவன் நன்றி கூறினார்.

தினமலர்

# நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மிளகு ஏற்றுமதி 6 சதவீதம் வளர்ச்சி

ஜூலை 22,2011,00:17




கொச்சி: நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான, முதல் காலாண்டில் நாட்டின் கறுப்பு வகை மிளகு ஏற்றுமதி 6 சதவீதம் வளர்ச்சி கண்டு 4,460 டன்னாக அதிகரித்துள்ளது. இது, 2010-11ம் நிதியாண்டின், இதே காலாண்டில், 4,200 டன்னாக இருந்தது.உள்நாட்டில் மிளகிற்கான @தவையும், அதன் விலையும் அதிக ஏற்ற, இறக்கமின்றி உள்ளது.இந்நிலையில், உலகின் பல்வேறு நாடுகளில், மிளகிற்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனால், சர்வதேச அளவில், மிளகு உற்பத்தியில் முன்னணி நாடுகளின் மிளகு ஏற்றுமதி அதிகரித்து வருகிறது.

உலகளவில் மிளகு உற்பத்தியில், முன்னணியில் உள்ள வியட்நாம் நாடு, நடப்பு நிதியாண்டின், முதல் காலாண்டில், 35 ஆயிரம் டன் மிளகை ஏற்றுமதி செய்துள்ளது. நடப்பு 2011ம் ஆண்டின், ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலத்தில், இந்நாட்டின் மிளகு ஏற்றுமதி (கறுப்பு மற்றும் வெள்ளை மிளகு) ஏற்றுமதி 68 ஆயிரம் டன்னாக இருந்தது.மேற்கத்திய நாடுகள் மற்றும் ஆசிய பசிபிக் நாடுகளில் மிளகிற்கான தேவை அதிகரித்துள்ளது. வியட்நாம் நாட்டின் மிளகு, சர்வதேச சந்தையில், ஒரு டன் 5,500 டாலர் என்ற அளவில் உள்ளது.

கடந்த ஒரு சில மாதங்களாக, பிரேசில் நாடு மிளகு விற்பனையில் ஈடுபடாமல் இருந்தது. தற்போது, அறுவடை முடிந்து, Œந்தைக்கு வரத்து அதிகரித்து வருகிறது. இதனால் அந்நாடு மீண்டும் மிளகு ஏற்றுமதி மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

**உணவு பணவீக்கம் 7.58 சதவீதமாக குறைந்தது**

ஜூலை 22,2011,00:15




புதுடில்லி: நாட்டின் பணவீக்கம், ஜூலை 9ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 7.58 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 8.31 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.73 சதவீதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் விலை மிகவும் குறைந்துள்ளது.

அதேசமயம், எரிபொருட்கள் மற்றும் மின்சாரச் செலவினம் அதிகரித்ததையடுத்து, இதற்கான குறியீட்டு எண் ஆண்டுக்கணக்கில், 11.89 சதவீதம் என்ற அளவில் உயர்ந்திருந்தது. ஆண்டுக்கணக்கில், பருப்பு வகைகள் விலை, 7.67 சதவீதம் குறைந்திருந்தது. இருப்பினும், இதர உணவுப் பொருட்களின் விலை அதிகரித்திருந்தது.கணக்கீட்டு வாரத்தில், வெங்காயத்தின் விலை, சென்ற ஆண்டின் இதே வாரத்தை விட, 19.68 சதவீதம் என்ற அளவிலும், பழங்கள் விலை, 15.84 சதவீதம் என்ற அளவிலும் உயர்ந்திருந்தது. மேலும், பால் விலை 10.76 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன்கள் விலை 8 சதவீதமும் உயர்ந்திருந்தது.இவை தவிர, உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகள் விலை முறையே, 4.77 சதவீதம் மற்றும் 4.31 சதவீதம் அதிகரித்திருந்தது.முக்கிய உணவுப் பொருட்களின் விலை, 11.13 சதவீதம் என்ற அளவில், சற்று குறைந்து காணப்பட்டது. இது, இதற்கு

முந்தைய வாரத்தில், 11.58 சதவீதம் என்ற அளவில் இருந்தது. மொத்த விலை குறியீட்டு எண் கணக்கீட்டில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு 20 சதவீதம் என்ற அளவில் உள்ளது.உணவு சாராத பொருட்கள் விலை, ஜூலை 9ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 15.50 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 15.20 சதவீதம்

**ஆட்டம் கண்டது காய்கறி விற்பனைமந்த நிலை நீடிக்குமா?**

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2011,01:06 IST

எஸ்.அசோக்குமார்/கோயம்பேடு : கடந்த ஒரு வாரமாக குறைந்திருந்த காய்கறிகளின் விற்பனை, ஆடி மாதம் துவங்கியதும், மேலும் மந்தமடைந்ததால், கோயம்பேடு வியாபாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். இருப்பினும் காய்கறிகளின் விலையில் மாற்றம் இல்லை. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு, தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்தும், காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. இவற்றை மொத்த வியாபாரிகளிடம் இருந்து, கோயம்பேடு மார்க்கெட் சில்லறை வியாபாரிகள் மற்றும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களின் பல்வேறு மார்க்கெட் வியாபாரிகளும் வாங்கிச் சென்று விற்பனை செய்கின்றனர். கடந்த ஆனி மாதம் முழுதும் சுபநிகழ்ச்சிகள் அதிகளவில் நடந்தன. இதனால் காய்கறிகள் விற்பனையும் கணிசமாக உயர்ந்தது. காய்கறிகள் வரத்து சராசரியாக இருந்தபோதும், அவற்றின் விலை விறுவிறுவென உயர்ந்தது. ஆனி மாதத்தின் கடைசி மங்கள நாள் கடந்த 10ம் தேதியுடன் முடிந்தது. அதன் பிறகு திருமணம் உள்ளிட்ட மங்கள நிகழ்ச்சிகள் நடக்கவில்லை. இதனால், கடந்த ஒரு வார காலமாகவே, கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விற்பனை எதிர்பார்த்த அளவில் நடக்கவில்லை. ஓட்டல், பாஸ்ட்புட் கடைகளுக்கு தேவைக்காக காய்கறிகள் வாங்கிச்செல்லப்பட்டன. ஆடி மாதம் துவங்கிய நிலையில், கோயம்பேடு மார்க்கெட்டிற்கு 330க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் காய்கறிகள் விற்பனைக்கு வந்தன. ஆனால், அவை எதிர்பார்த்த அளவில் விற்பனையாகாததால் வியாபாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். கோயம்பேடு சில்லறை மார்க்கெட்டில் பொதுமக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. விற்பனை மந்தமானாலும், காய்கறிகளின் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை. கோயம்பேடு சில்லறை விற்பனை மார்க்கெட்டில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 12 ரூபாய்க்கும், பெல்லாரி வெங்காயம் 16, பீன்ஸ் 12, கேரட் 18 முதல் 20, சவ்சவ் 18, முட்டைகோஸ் 5, டபுள் பீன்ஸ் 130, பச்சைப்பட்டாணி 140 ரூபாய்க்கும் விற்கப்பட்டன. இஞ்சி 35 ரூபாய்க்கும், சேப்பங்கிழங்கு15, சேனைக்கிழங்கு 20, கத்தரிக்காய் 10, வெண்டைக்காய் 18, அவரைக்காய் 20, புடலைங்காய் 8 முதல் 12, கோவைக்காய் 10, வெள்ளரிக்காய் 8, முருங்கைக்காய் 20, தக்காளி 8, சாம்பார் வெங்காயம் 30 ரூபாய்க்கும் விற்கப்பட்டன. இது குறித்து கோயம்பேடு மார்க்கெட் காய்கறி வியாபாரிகள், ""சுப

நிகழ்ச்சிகள் இல்லாததால் இன்னும் ஒரு மாத காலத்திற்கு காய்கறிகள் விற்பனை மந்த நிலையில் இருக்கும்.டீசல் விலை உயர்ந்தபிறகு லாரி வாடகை இன்னும் உயர்த்தப்படவில்லை.லாரி வாடகை உயராமல், காய்கறிகள் விற்பனை மேலும் சரியும் பட்சத்தில், அவற்றின் விலை கண்டிப்பாக குறையும்," என்றனர்.

**நெல், விதை உற்பத்திக்கானவிவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2011,02:48 IST

பரங்கிப்பேட்டை:பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட கோவிலாம்பூண்டி கிராமத்தில் நெல், விதை உற்பத்திக்கான விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். உதவி இயக்குனர் மதிவாணன் வரவேற்றார். வேளாண்மைத் துறை திட்டங்கள் பற்றியும், நெல், விதை உற்பத்திக்கான தொழில் நுட்பங்கள், விதை நேர்த்தியின் அவசியம் உள்ளிட்டவைகள் எடுத்துக் கூறப்பட்டது.உதவி வேளாண்மை அலுவலர் மணிமாறன் மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல் பற்றி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. துணை வேளாண்மை அலுவலர் கிருஷ்ணன் நன்றி கூறினார்.

**வேளாண் அலுவலகத்தில் விதை "மினி கிட்' வினியோகம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2011,01:12 IST

பள்ளிபாளையம்: "புது ரகங்களைப் புகுத்தும் விதை "மினி கிட்' பள்ளிபாளையம் வேளாண் அலுவலகத்தில் வினியோகிக்கப்படுகிறது' என, உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: விதை "மினி கிட்' மூலம் குறுந்தழைகள் அமைத்து புதிய ரகம் சாகுபடிக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. எள், மக்காச்சோளம், நிலக்கடலை ஆகியவை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள், புதிய "மினி கிட்' விதைகளைப் பெற்று வயல்களில் சாகுபடி செய்யலாம்.
புதிய ரகங்களில் நல்ல மகசூல் கிடைத்தால், அதன் விதைகளை தாங்களும் பயன்படுத்தி, மீதமுள்ள விதைகளை விவசாயிகளுக்கு வழங்கலாம். அதன்மூலம் புது ரகங்களின் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. "மினி கிட்' திடல்களுக்கு விதைப்பு செய்திட சிறு பரப்புக்கு தேவையான விதைப்பைகள் மானிய விலையில் வினியோகிக்கப்படுகிறது. பயிறு வகை "மினி கிட்'களும் விற்பனைக்கு வர உள்ளது. அதற்கு விவசாயிகள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

"மினி கிட்' திடல்களை வேளாண் துறை அலுவலர்களால் பார்வையிடப்பட்டு உரிய பரிந்துரை வழங்கப்படும். புதுரகங்களின் பயிர் வளர்ச்சி விபரங்கள் பதிவு செய்யப்படும். "மினி கிட்' திடல்களில் பெறப்படும் விதைகள் விவசாயிகளிடையே மாற்றம் செய்து கொள்ளலாம்.
இதற்கு, சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். புதய ரக விதை "மினி கிட்' திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையம் அல்லது பகுதி வேளாண் உதவி அலுவலர்களை அணுகி "மினி கிட்' பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2011,01:36 IST

கோபிசெட்டிபாளையம்: கேரளா, நீலகிரியில் பெய்யும் மழையால் பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து கூடிவருகிறது. அணையின் நீர்மட்டம் 80 அடியை தாண்டி உள்ளது.
கேரளா மற்றும் நீலகிரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்கிறது. இதன் காரணமாக பில்லூர் அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டு, பவானி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. சென்ற ஒரு வாரமாக பவானிசாகர் அணையின் நீர் வரத்து கணிசமாக உயர்ந்து வருகிறது.
நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 78.96 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4,404 கன அடி தண்ணீர் வரத்தானது. நேற்று நீர்வரத்து மேலும் அதிகரிக்க துவங்கியது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 80.40 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 8,785 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. ஆற்றில் 1,250 கன அடியும், வாய்க்காலில் ஐந்து கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.
கேரளாவில் பருவ மழை தீவிரம் அடைந்துள்ள நிலையில், அதன் தாக்கத்தால் நீலகிரியிலும் மழை பொழிவு ஏற்பட்டுள்ளது. மழை மேலும் தீவிரம் அடையும்பட்சத்தில் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரித்து, நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ஈரோடு மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வேளாண் விற்பனை ஒழுங்கு முறை ஆணைய அலுவலர் முற்றுகை**

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2011,00:33 IST

ஊட்டி:"விவாயிகளிடம் வரி வசூலிக்க கூடாது,' என வலியுறுத்தி, வேளாண் விற்பனை ஒழுங்கு முறை ஆணைய அலுவலரை விவசாயிகள் நேற்று முற்றுகையிட்டனர்.

நீலகிரியில் அறுவடை செய்யப்படும் காய்கறிகள் மற்றும் உருளைகிழங்கை விவசாயிகள் மேட்டுப்பாளையத்துக்கு கொண்டு விற்று வருகின்றனர். விளை பொருட்களை லாரிகள் மற்றும் வாடகை வாகனத்தில் கொண்டு செல்கின்றனர். இந்நிலையில், கடந்த சில மாதங்களாக விவசாயிகள் கொண்டு செல்லும் விளை பொருட்களுக்கு சுங்க வரி விதிக்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர். ஊட்டியிலிருந்து லாரிகள் மூலம் கொண்டு செல்லும் பொருட்களுக்கு இந்த வரி வேளாண் விற்பனை ஒழுங்கு முறை ஆணையம் சார்பில் விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில், நேற்று ஊட்டியிலிருந்து மேட்டுபாளையத்துக்கு காய்கறி ஏற்றி சென்ற லாரியை வேலிவியூ என்ற இடத்தில் வேளாண் விற்பனை ஒழுங்கு முறை ஆணைய அலுவலர் தனிகொடி நிறுத்தி வரி வசூலிக்க முற்பட்டார். அப்போது, அங்கு வந்த நீலகிரி உருளைகிழக்கு உற்பத்தியாளர் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் ரமேஷ்பெள்ளி மற்றும் நிர்வாகிகள், வேளாண் விற்பனை ஒழுங்கு முறை ஆணைய அலுவலர் தனிக்கொடியை முற்றுகையிட்டு,"விவசாயிகளிடம் வரி வசூலிக்க கூடாது,' என வலியுறுத்தினர். "வியாபாரிகளிடமே வரி வசூலிக்கப்படுகிறது;விவசாயிகளிடம் வரி வசூலிக்கப்பட மாட்டாது,' என வேளாண் விற்பனை ஓழுங்கு முறை ஆணைய அலுவலர் தனிக்கொடி தெரிவித்தார்."விளை பொருட்கள் சந்தைக்கு கொண்டு செல்லும் போது தான் வரி விதிக்கப்பட வேண்டும்; லாரிகளில் கொண்டு செல்லப்படும் காய்கறிகள் யாருடையது என்பதை வேளாண் விற்பனைக்குழு அலுவலர்கள் எவ்வாறு கண்டறிவர் என தெரியவில்லை; இது குறித்து கலெக்டரிடம் முறையிடப்படும்,' என நீலகிரி உருளை கிழக்கு உற்பத்தியாளர் சங்க செயலாளர் ரமேஷ்பெள்ளி தெரிவித்துள்ளார்.

**கி.புரத்தில் வாழை சாகுபடி தீவிரம் : குவியும் வெளிமாநில வியாபாரிகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2011,00:57 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் சுற்று வட்டார பகுதிகளில் வாழைத்தார் சாகுபடி விறு விறுப்பாக நடந்து வருகிறது. வெளிமாநில வியாபாரிகள் குவிந்துள்ளதால் வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டள்ளது. கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்குட்பட்ட லாலாப்பேட்டை, பிள்ளப்பாளையம், வல்லம், மகாதானபுரம், மகிளிப்பட்டி, புதுப்பட்டி, வீரவள்ளி, திருக்காம்புலியூர், கருப்பத்தூர், திம்மாச்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர்.
அதில், வெளி மாநிலத்துக்கு கொண்டு செல்லப்படும் வாழை ரகங்களான கற்பூரவள்ளி, பூவன், ரஸ்தாளி ஆகிய வாழை ரகங்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. கிருஷ்ணராயபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பயிரிடப்படும் வாழை ரகங்கள் சுவையாவும், தரம் உடையதாகவும்

உள்ளதால் வெளி மாநிலங்களில் நல்ல கிராக்கி உள்ளது. இதனால் வெளிமாநிலங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வாழைதாரை கொள்முதல் செய்ய நேரிடையாக கிருஷ்ணராயபுரம் பகுதிகளில் குவிந்துள்ளனர்.

கேரளா, கர்நாடகா மற்றும் திருச்சி, கோவை, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை சேர்ந்த வெளி மாநில, மாவட்ட வியாபாரிகள், விவசாயிகளின் தோட்டங்களுக்கு நேரிடையாக சென்று வாழைத்தார் ஒன்றுக்கு 130 ரூபாய் முதல் 180 ரூபாய் வரை விலை பேசி வெட்டி எடுத்து செல்கின்றனர். உள்ளூர் விவசாயிகளுக்கு வெட்டு கூலி மற்றும் போக்குவரத்து செலவு பெருமளவில் குறைகிறது. இதனால் விவசாயிகளுக்கு கடந்தாண்டை விட தற்போது, அதிகளவில் லாபம் கிடைத்து வருகிறது. குறிப்பாக, ஓர் ஏக்கருக்கு 80 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் வரை வாழைத்தார்கள் விலை போவதாக, விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## ***பருப்பு வகைகள் விலை குறைவால் உணவு பொருள் பணவீக்கம் 7.58%–ஆக குறைந்தது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*உணவு பொருள் பணவீக்கம் ஜூலை 9–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், கடந்த மூன்று வாரங்களில் இல்லாத அளவிற்கு 7.58 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 8.31 சதவீதமாக இருந்தது.*

*நம்பிக்கை*

*கடந்த 2010–ஆம் ஆண்டு ஜூலை இரண்டாவது வாரத்தில் இது 19.52 சதவீதமாக மிகவும் உயர்ந்து இருந்தது. தற்போது உணவு பணவீக்கம் குறைந்து வருவது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் சற்று ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது. நடப்பு ஆண்டின் இறுதிக்குள் உணவு பணவீக்கம் 6–7 சதவீதமாக குறையும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் விலை 7.67 சதவீதம் குறைந்துள்ளது. அண்மையில் நிறைவடைந்த வேளாண் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி வரலாறு காணாத அளவில் 1.81 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. அடுத்த 3–4 ஆண்டுகளில் பருப்பு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடையும் என மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அதேசமயம், வெங்காயம் மற்றும் பழங்கள் விலை முறையே 19.68 சதவீதம் மற்றும் 15.84 சதவீதம் அதிகரித்துள்ளது. பால் விலை 10.76 சதவீதமும், முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 8 சதவீதமும் உயர்ந்துள்ளது. மக்காச்சோளம் உள்ளிட்ட தானியங்கள் விலை 4.77 சதவீதமும், காய்கறிகள் விலை 4.31 சதவீதமும் உயர்ந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 11.58 சதவீதத்திலிருந்து 11.13 சதவீதமாக குறைந்துள்ளது. உணவு சாரா பொருள் பணவீக்கம் 15.20 சதவீதத்திலிருந்து 15.50 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பாரத ரிசர்வ் வங்கி

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை பல முறை உயர்த்தியதையடுத்து, கடந்த மே மாதத்தில் நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி கடந்த ஒன்பது மாதங்களில் இல்லாத அளவிற்கு 5.6 சதவீதமாக குறைந்துள்ளது. மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, கடந்த ஐந்து காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.8 சதவீதமாக குறைந்துள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் உணவு பொருள் பணவீக்கத்தின் பங்களிப்பு 14 சதவீதமாக உள்ளது. எனவே, இனிவரும் மாதங்களில் பொது பணவீக்கம் சற்று குறைய வாய்ப்புள்ளது என சில பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பொது பணவீக்கம்

இருப்பினும், கடந்த மே மாதத்தில் 9.06 சதவீதமாக இருந்த பொது பணவீக்கம், ஜூன் மாதத்தில் 9.44 சதவீதமாக உயர்ந்துள்ளது. எனவே, பாரத ரிசர்வ் வங்கி, இம்மாதம் 26–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கத்தை கட்டுப்படுத்த உணவு தானியங்களை சேமிக்கும் வசதி, குளிர் பதன மற்றும் சரக்கு போக்குவரத்து வசதி போன்றவற்றை மேம்படுத்த வேண்டும் என்பது பெரும்பாலான பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

## சீனாவிற்கான கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி சீரான வளர்ச்சி

சுதானுகா கோசல்

கொல்கத்தா

சீனாவிற்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி சீரான வளர்ச்சி கண்டு வருகிறது. மேற்கு வங்காளம் மற்றும் குஜராத்திலிருந்து சீனாவிற்கு அதிக அளவில் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாகி வருகின்றன. குறிப்பாக இந்த மாநிலங்களில் கடல் பகுதிகளில் கிடைக்கும் விலை குறைந்த கணவாய் மீன் மற்றும் வாளை மீனுக்கு சீனாவில் தேவைப்பாடு நன்றாக உள்ளதாக தெரிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மேற்கு வங்களாத்திலிருந்து சீனாவிற்கு மிகக் குறைந்த அளவே கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாயின. ஆனால் சமீப காலத்தில் ஏற்றுமதி ஆண்டுக்கு 7,000 டன் என்ற அளவிற்கு அமோக வளர்ச்சி கண்டுள்ளது. சீனாவின் கடல் உணவுப் பொருள்கள் இறக்குமதியில் குஜராத் மாநிலத்தின் பங்களிப்பும் கணிசமாக உயர்ந்த வருகிறது. குறிப்பாக இங்கிருந்து வாளை மீன், ஊசி கணவாய், சூரை மீன் வகைகள் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. சீனாவிற்கு அடுத்தபடியாக ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் உணவுப் பொருள்கள் குஜராத்திலிருந்து செல்கின்றன.

சென்ற நிதி ஆண்டில், டாலர் மதிப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி இந்தியாவின் மொத்த கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் மகாராஷ்டிரா, கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம், குஜராத் ஆகிய மாநிலங்கள் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கின்றன. ‘பிளாக் டைகர்’ இறால்கள், நன்னீர் இறால்கள், ஊசி கணவாய், சூரை மீன்கள் ஆகியவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

## 2010–ஆம் ஆண்டு க ப் பருவம் வரை பயிர் காப்பீட்டு திட்டத்தில் 17.14 கோடி விவசாயிகள்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மத்திய அரசின் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 2010–ஆம் ஆண்டு கரீஃப் பருவம் வரையிலான காலத்தில், பயன்பெறும் விவசாயிகளின் மொத்த எண்ணிக்கை 17.14 கோடியாக உள்ளது. இவர்கள் 26.27 கோடி ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

25 மாநிலங்களில்...

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் தற்போது 25 மாநிலங்களிலும், 2 யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் இத்திட்டத்தை அமல்படுத்துகிறது. இது 1999–2000–ஆம் ஆண்டு ரபி

*பருவத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பூச்சித் தாக்குதல், நோய்கள் போன்ற பாதிப்புகளிலிருந்து விவசாயிகளைக் காக்கும் விதத்தில் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.*

*பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமிய தொகைக்கு மானியம் வழங்கப்படுகிறது. இந்த செலவினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இவ்வளவு காலத்தில், இத்திட்டத்தின் கீழ் ரூ.6,303 கோடி பிரிமிய வருவாய் கிடைத்துள்ள நிலையில் ரூ.21,031 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 4.61 கோடி விவசாயிகள் பலனடைந்துள்ளனர் என மத்திய அரசின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கிறது.*

*2010–11 ரபி பருவத்தில் 3.64 லட்சம் ஹெக்டேரில் விவசாயம் செய்து வரும் 3.66 லட்சம் விவசாயிகளுக்கு காப்பீட்டு வசதி வழங்கப்பட்டது. ரூ.71,921 கோடிக்கு இவர்களுக்கு பயிர்க் காப்பீடு அளிக்கப்பட்டுள்ளது.*

*புதிய திட்டம்*

*பயிர்க் காப்பீட்டுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வந்தாலும், சில சமயங்களில் சில புகார்கள் வருகின்றன. எனவே இதிலுள்ள இடர்பாடுகளை களையும் வகையில், 2010–11 ரபி பருவத்தில் மத்திய அரசு மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக இது அமல்படுத்தப்பட்டுள்ளது.*

தினகரன்

**மலேசிய கொள்முதல் நிறுத்தம் வெங்காய விலை கடும் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : 7/22/2011 0:9:35



ஒட்டன்சத்திரம் : தமிழகத்திலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்து வந்த மலேசிய நிறுவனங்கள் திடீரென கொள்முதலை நிறுத்தியதால் வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. மலேசியாவில் வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து கடந்த 15 நாட்களாக தமிழகத்திலிருந்து அதிகளவில் சின்ன வெங்காயம் ஏற்றுமதியானது. மொத்த விலைக்கு கிலோவுக்கு ரூ.35 கொடுத்து

வியாபாரிகள் போட்டி போட்டு வெங்காயத்தை வாங்கிச் சென்றனர்.

இதனால், விவசாயிகளுக்கும் ஓரளவு கட்டு படியான விலை கிடைத்தது. ஆனால், தாய்லாந்து, இந்தோனேசியாவில் இருந்து குறைந்த விலையில் வெங்காயம் கிடைத்ததால் தமிழகத்தில் இருந்து வெங்காயம் வாங்குவதை மலேசிய நிறுவனங்கள் திடீரென நிறுத்தின. இதனால், தமிழகத்தில் வெங்காய விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. தமிழகத்தின் பெரிய வெங்காய சந்தைகளில் ஒன்றான திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் தற்போது ஒரு கிலோ வெங்காயம் ரூ.16 முதல் ரூ.20 வரை மட்டுமே விலைபோகிறது. இந்த விலை வீழ்ச்சியால் வெங்காய விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள் ளனர்.

விதை வெங்காயம் கிலோ ரூ.40க்கு வாங்கி நடவு செய்த விவசாயிகளுக்கு இந்த விலை குறைவு பெரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், விவசாயிகள் பட்டறை அமைத்து இருப்பு வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். விதை மூலம் நடவு செய்த வெங்காயத்தை 3 மாதம் வரை இருப்பு வைக்கலாம் என்பதால் விலை உயரும்போது விற்பனைக்கு அனுப்பலாம் என விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். ஆனால், நாற்று வாங்கி நடவு செய்த வெங்காயத்தை இருப்பு வைக்க முடியாது என்பதால் கிடைத்த விலைக்கு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இதனால், விவசாயிகள் நஷ்டத்தைச் சந்திக்கின்றனர்.

## உணவு பணவீக்கம் 0.73 சதவீதம் சரிவு

பதிவு செய்த நாள் : 7/22/2011 0:8:48

கருத்துகள்

கருத்துகளை தெரிவிக்க



புதுடெல்லி : இந்த மாதம் 9ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 7.58 சதவீதமாக குறைந்தது. அத்தியாவசிய உணவுப் பொருட்களான பால், பால் பொருட்கள், காய்கறி, பழங்கள், தானியம், முட்டை, பருப்புகள் ஆகியவற்றின் விலை நிலவர அடிப்படையில் உணவு பணவீக்கம் வாரந்தோறும் கணக்கிடப்பட்டு மத்திய அரசு சார்பில் வெளியிடப்படுகிறது. கடந்த ஆண்டு இருந்த விலையுடன் ஒப்பிட்டு இந்த புள்ளிவிவரம் வெளியாகிறது.

கடந்த 2ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.31 சதவீதமாக இருந்தது. அடுத்த வாரத்தில் காய்கறி, முட்டை, இறைச்சி உட்பட பல பொருட்களின் விலை சரிவால் உணவு பணவீக்கம் 0.73 சதவீதம் குறைந்து 7.58 சதவீதமானதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சக செய்திக் குறிப்பு நேற்று தெரிவித்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஜூலை 2ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் வெங்காய விலை உயர்வு 30.72 சதவீதமாக இருந்தது. அது ஜூலை 7ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 19.68 சதவீதமானது. முட்டை, இறைச்சி, மீன் விலை உயர்வும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.97 சதவீதமாக குறைவான வளர்ச்சி கண்டது. காய்கறி 4.31 சதவீதம், பழங்கள் 15.84 சதவீதம், உருளைக்கிழங்கு 4.2 சதவீதம், அரிசி 1.32 சதவீதம், கோதுமை 2.4 சதவீதம் என கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் விலை உயர்வில் சரிவை கண்டன. பருப்புகள் விலை 7.67 சதவீதம் சரிந்தது.